1970 மார்ச் 20]

கரும்பு விலை.

*454 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார், கரும்பு விலை டன் ஒன்று 100 ரூபாய்க்கும் குறைவாக இருக்கக் கூடாதென்று உத்தரவிட்டுள்ளார்களா ?

(இ) ஆம், என்றால் எப்போது அமுல் படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பாராளுமன்றத்திலே ஒரு கேள்விக்கு, உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களே 100 ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாது என்று தமிழ்நாட்டு சர்க்காருக்கு தெரிவித்ததாகவும், அந்த அளவுக்கு முடியாது என்று இந்தச் சர்க்கார் சொன்னதாகவும் ஒரு பதில் அளித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஏதாவது பதில் வந்திருக்கிறதா ? அப்படிக் குறைவாகக் கொடுக்க முடியும் என்ற அளவுக்கு இந்தச் சர்க்காரின் மதிப்பீடு இருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதில் நமது அரசாங்கத்தின் ஒப்புதலோ அல்லது ஆணையோ கிடையாது, மத்திய அரசாங்கம்தான் இந்த விலையை நிர்ணயிக்கிறது. மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலை ரூ. 73.70 டன் ஒன்றுக்கு இந்த விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். அதிலும்கூட 9.4 சதவிகிதத்திற்கு இனிப்பு சத்தின் அளவு கொடுத்தால் இந்த விலை கொடுக்கலாம். 9.4 சதவிகிதத்திற்கு மேற்கொண்டு கொடுக்கின்ற ஒவ்வொரு புள்ளி சதவிகிதத்திற்கும் 53.6 காசு உயர்த்தி கொடுக்கலாம். மத்திய சர்க்கார்தான் நிர்ணயிக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினாவர்கள் கூறுவதுபோல, இப்படிப்பட்ட கேள்வியோ, அதற்குரிய பதிலையோ பற்றி நம் அரசாங்கத்திற்கு எந்த விதமான தகவலும் கிடையாது, ஒப்புதலும் கிடையாது.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, கூட்டுறவு சங்க சர்க்கரை ஆலைகளில் 8.2 சதவிகிதம் வருகிறது என்று கணக்கிடுகிறார்கள். ஆனால் தனியார் சர்க்கரை ஆலைகளில் 7 சொச்சம், 6 சொச்சம் வருகிறது என்று கணக்குக் காட்டுகிறார்கள். எனவே, கூட்டுறவு சங்க ஆலைகளில் 75 ரூபாய், 80 ரூபாய் கொடுத்தால், தனியார் சர்க்கரை ஆலைகளில் 73 ரூபாய்தான் ஒரு டன்னுக்குக் கொடுத்துவருவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, சராசரியாக எல்லா ஆலைகளிலும் ஒரேவிதமாக விலை நிர்ணயிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 73.70-க்கு மேலே 80 ரூபாய் வரையிலும், மேற்கொண்டு 5 ரூபாய் வரையிலும், பெண்ணாடம் அருணா சுகர்ஸ் கம்பெனியார் தர ஒத்துக்கொண்டு வருகிறார்கள். குறைந்த விலைக்கு கரும்பை எடுத்துக்கொள்வதெல்லாம், விவசாயப் பெருமக்களைச் சார்ந்தது. சில விவசாயிகள் அவர்களாகவே குறைந்த விலைக்குத் தருவதாக அரசாங்கத்திற்கு தகவல் வருகிறதே தவிர, தொழிற்சாலையினரோ யாருமே அப்படி எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் கூற விரும்புகிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், விவசாயிகளிடமிருந்து, தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு மேலும் உயர்த்திக் கொடுக்கும்படி கோரி மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யும்படி ஏதாகிலும் மனு வந்ததா? அதுகுறித்து அமைச்சரவர்கள் என்ன முடிவெடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான் அதைத்தான் சொல்லுகிறேன். எந்தவித சிபார்சும் நாம் செய்தால் கூட மத்திய அரசாங்கம்தான் இதுபோன்ற விலைகளைத் திட்டவட்டமாகக் கூறுகிறது. இந்த விலையை உயர்த்துவதோ அல்லது குறைப்பதோ மத்திய அரசாங்கத்தின் பொறுப்பே தவிர, மாநில அரசாங்கத்தின் பொறுப்பு அல்ல.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர்களே, கரும்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால் விவசாயிகள் இப்பொழுது 40 ரூபாய், 50 ரூபாய் கொடுத்தால் கூட கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு இருக்கும் அதை மாற்றி, சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு இல்லாவிட்டாலும், ஓரளவுக்குக் கட்டுப்படியாகக்கூடிய அளவுக்குக் கொடுக்கும் விலையில் அந்தக் கரும்பை வாங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப்பற்றி ஆலோசனை செய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இப்பொழுது கரும்பின் விலை 73 ரூபாய், 74 ரூபாய் இருக்கின்றது டன் ஒன்றுக்கு. ஆனால் ஆலைக்குப் போகும்பொழுது கரும்பின் விலை 40 ரூபாய்தான் என்று ஒரு விவசாயியின் கையிலே கிடைக்கிறது. அதை மாற்றி ஸ்பாட்டிலே எடுக்கக்கூடிய அதே 73 ரூபாய் விலை கிடைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்வார்களா? இதற்கு அமைச்சரவர்கள் வஞ்சனை இல்லாமல் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரும்பின் விலையை நிர்ணயித்திருப்பது எக்ஸ்ஃபீல்ட் ரேட்தானே தவிர, எக்ஸ்மில் ரேட் அல்ல, 73.7 என்று நிர்ணயித்திருப்பது. 73.7-க்குக் குறைந்து கொடுக்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் உத்தரவு பிறப்பித்த காரணத்தால் பெருத்த நஷ்டம் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. 40, 45 ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்று சொன்னால் அப்படி வாங்குவது சட்டப்படி குற்றம். 73.7-க்குக் குறைந்து வாங்கக்கூடாது. ஆனால் பொதுமக்கள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அது பொதுமக்களுக்குத் தெரிந்த விஷயமாக இருக்கும், அரசாங்கத்திற்கு இது பற்றி தகவல் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மக்களாகவே கொடுக்கிறார்கள் என்று சொன்னால், யாரும் பணத்தை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்கள். கொடுக்க முடியாது என்ற நிலையிலும், அந்த நேரத்திலே கரும்பு உலர்ந்து பாதிக்கக்கூடாது என்ற அளவிலே கொடுக்கலாம். ஆகவே, குறைந்த ரேட்டிற்கு யார் வாங்கினாலும் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

1970 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, குறைந்த விலை கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சர்க்காரே அறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது புகார் இருந்து, நிரூபித்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து. விவசாயிகள் தாங்களாகவே வந்து குறைந்த விலைக்குத் தொழிற்சாலையில் கொடுக்கிறார்களே தவிர, யாரும் கட்டாயப்படுத்தி அவர்களை அப்படிச் செய்யச் சொல்லவில்லை. குறைந்த விலை இருக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அப்படி ஏதேனும் புகார்கள் இருந்தால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

சமூகநல ஊழியர்கள் சம்பளம்.

* 455 வினா----திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரிசனநல இலாக்காவில் சமூக நல ஊழியர்களாக (Social Workers Male and Female) பணியாற்றுபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்! திருவாக வசதியை முன்னிட்டுத் தென்னாற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் அரிசன நலத் துறையில் சமூக நல ஊழியர்களாகப் பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகரவர்களே, எல்லா வேலைகளையும் மேற்பார்வையிடுவது ஹரிஜன இலாக்கா ஆபீசர்களாக இருப்பதால் சம்பளம் மட்டும் ஏன் அங்கு கொடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, சோஷியல் ஒர்க்கர்ஸ்களில் அதிக அதிகாரம் உள்ள ஆண்களுக்கு 100 ரூபாய் என்று குறிப்பிட்டும், பெண்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அதிகமான ரூபாயும் வைத்திருக்கிறார்களே, எனவே பெண்களுக்குக் கொடுப்பதைப்போல், ஆண்களுக்கும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தச் சமூகப் பணியாளர்கள் ஏற்கெனவேயிருந்த அரசாங்கத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதிலே சமூக நல ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பணிகளிலே சற்று மாறுதல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அதற்குப்பிறகு தான் ஊதிய உயர்வு பற்றியெல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறது.

திரு. பி. துரைராஜ் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் இத்தகைய ஆண், பெண் சோஷியல் ஒர்க்கர்ஸ் எத்தனைபேர்கள் வேலை செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.